ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2017 ஏப்பிறல் 12 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடு – 2017 மாச்சு

- **தயாரிப்புத் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** மாச்சு மாதத்தில் 66.5 கொண்ட சுட்டெண்ணினை பதிவு செய்ததுடன் இது பெப்புருவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 9.4 சுட்டெண் புள்ளிகளை கொண்ட ஒரு அதிகரிப்பாகும். இது, புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்களின் அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டவாறு புதுவருட பருவகால கேள்விகளினுடான அதிகரிக்கும் கேள்விகள் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகள் பெரிதும் காரணமாக அமைந்து உற்பத்தி நடவடிக்கைகள் 2017 மாச்சில் தொடர்ச்சியான அதிகரிப்பை குறித்துக்காட்டியது. கொள்வனவுகளின் இருப்பானது, ஒன்றுசேர்ந்த இருப்புகளின் அதிகரிப்பு மற்றும் கடந்த மாதத்தில் காணப்பட்ட வழங்குதல் தாமதங்கள் சீர்செய்யப்பட்டமை போன்றவற்றின் காரணமாக அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிரம்பலர் வழங்கல் நேரம் குறிப்பாக சீனாவின் அவர்களுடைய புதுவருட காலத்திற்க்கு பிறகு வழங்குதல் ஏற்பாடுகள் சாதாரண நிலையாக்கப்பட்டதுடன் ஒரு குறைவினை பதிவு செய்தது. தொழில்நிலை துணைச் சுட்டெண்ணும் கடந்த மாதத்துடன் ஒப்பிடும் போது சிறிதளவில் சரிவடைந்து காணப்பட்டது. ஒட்டுமொத்த தரவுப்புள்ளிகள் விரிவாக்கமொன்றினைக் கொண்டிருந்தவிடத்து மற்றைய அனைத்து துணைச் சுட்டெண்களும் 50.0 அடிமட்டத்திற்கு மேலேயே காணப்பட்டன. நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் அடுத்த மூன்று மாதங்களுக்காக மிதவேகமொன்றினை சுட்டிக்காட்டியது.

- **பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** 2017 பெப்புருவரியின் 57.3 சுட்டெண் புள்ளியிலிருந்து மாச்சு மாதத்தில் 60.8 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்தது. கடந்தமாதத்தின் பெறுமதியிலும் பார்க்க கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பானது, பணிகள் துறையின் பொருளாதார நடவடிக்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 மாச்சில் உயர் வேகத்தில் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டியது. பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பானது புதிய வியாபாரங்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் ஆதரவளிக்கப்பட்டன. தொழில்நிலை மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் 2017 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 2017 மாச்சில் குறைவடைந்த வேளையில் நிலுவையிலுள்ள பணிகள் குறைவான வீதத்தில் குறைவடைந்திருந்தது. கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் தொகுப்பு செயன்முறையில் பரிசீலனைக்கெடுக்கப்படாத விதிக்கப்பட்ட விலைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 மாச்சில் மெதுவான வீதத்தில் அதிகரித்திருந்தது. தொழிலாளர் செலவிற்கான எதிர்பார்ப்புக்கள் சுட்டெண் மூலம் அளவிடப்படும் எதிர்கால தொழிலாளர் செலவு 2017 மாச்சில் அதிகரித்தது.

| | ஆ/மா | சன | பெப் | மாச் | ஏப் | மே | யூன் | யூலை | ஓகத் | செத் | ஒத் | நவெ | திசெ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், தயாரிப்பு | 2015 | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | 67.3 | 57.5 | 55.5 | 56.5 | 53.2 | 57.8 | 54.8 | 57.9 |
| | 2016 | 51.9 | 55.3 | 60.7 | 41.6 | 47.9 | 55.1 | 50.6 | 53.5 | 57.7 | 56.5 | 58.4 | 58.3 |
| | 2017 | 56.2 | 57.1 | 66.5 | | | | | | | | | |
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், பணிகள் | 2015 | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | 66.8 | 65.0 | 60.6 | 59.8 | 61.7 | 59.5 | 59.3 | 60.2 |
| | 2016 | 58.0 | 59.3 | 61.6 | 54.7 | 58.1 | 56.3 | 57.8 | 61.2 | 57.7 | 59.3 | 59.7 | 59.8 |
| | 2017 | 57.5 | 57.3 | 60.8 | | | | | | | | | |

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பு




## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் பணிகள்



**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு = 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு > 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு < 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.